உ

சிவமயம்.

அதர்வசிரோபநிடதம்.

நெ-௰௫.

இஃது

அதர்வணவேதத்தின்

ஓர் சாகையின் இறுதியிலுள்ளது

மூலபாடம் பொழிப்புரை விசேஷவுரைகளுடன்

சிதம்பரம் ப்ரம்மவித்யா பத்திராதிபரான

பரஸமய பஞ்சானன பண்டித பாஞ்சஜன்ய

ப்ரம்மஸ்ரீ

கு. ஸ்ரீநிவாஸ தீக்ஷிதரவர்களால்

—0—

வடமொழியிலியற்றப்பட்ட

அதர்வசிகா பதவிவிருதி

என்றவியாக்யானத்திற்கிணங்க

அவர்களாலேயே தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு

தமது

(கடுக்காவேரி) ஸ்ரீ ஜகத்குருயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1900

இதன் விலை அணா 4

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

அத ஶ்ரீவைகாநஸதீக்ஷித விஷயாநுக்ரமணிகா ।

—— () ——

விஷயம்	ப்ருஷ்டம்	பங்க்தி:
அஶ்வமேதநம்	௧	௩
ஸமந்த்ரகம்	௨	௧௧
ஸங்கல்ப்யாஸநம்	௩	௪
ஸூத்ரலக்ஷணம்	௩	௧௩
பஞ்சகல்யாணாம்ருதம்	௪	௪
ஶ்ரீதீர்த்தபரிக்ஷா	௪	௧௮
த்ருதீயாதேவ்ய:	௫	௩
பாவநாதேஶம்	௫	௧௮
ப்ரயோகாங்கா	௮	௨௧
ஸர்வதேவ்யாங்கார:	௯	௨௩
ஸூத்ரதேஶக	௰	௯
த்ரிவக்ராவதம்ப:	௰	௨௰
ஸக்ருதாஞ்ஜலிதந்த்ர:	௧௧	௨௭
ப்ராணாயாமம்	௧௨	௬
ப்ராணாப்ரஸ்தாநம்	௧௨	௧௮
தேவாஸ்துதி	௧௪	௧
ஸர்வதேவா:	௧௪	௧௨
ஸர்வாணிப்ரதக்ஷிணம்	௧௫	௧
ஸர்வஸ்ராவ:	௧௫	௯
ப்ரகாஶஹ்ரு:	௧௬	௧
ப்ரதீர்த்தம்	௧௬	௧௫
பஞ்சகல்யாணாம்ருதம்	௧௭	௭

ஸர்வகாரணோபஸம்ஹாராத்	க௮	க௫
ஸர்வகாரணானி	க௯	௪
ப்ராணம் தேஹி	க௯	க௫
ப்ராணம் தேஹி	உ௰	௬
ஸர்வஶ்ரேஷ்ட	உ௰	உ௩
ஸ்வப்ராணான்	உ௨	உ௬
க்லிஷ்டோபாம்ஶாஸ்ராமதிம்	உ௩	௫
பரிவர்த்தகோஜஸ்வி	உ௩	க௭
கதாசமீபே	உ௪	௫

ஏவம் பரிஶோதிததிஷ்டஃ விஷயாணாமனுக்ரமணீ ஸமாப்தா ।

அதர்வசிரோபநிடத விஷயானுக்கிரமணி

விஷயங்கள்.	பக்கம்	வரி
முகவுரை	1	1
பாராயணபாடம்	1	1
உபோத்காதம்	1	2
கேள்விகள்	2	9
விடைகளின் ஆரம்பம்	3	2
பிரணவப்பிரசம்சை	,,	11
முதற்பாதநிரூபணம்	4	2
இரண்டாம்பாதநிரூபணம்	,,	16
மூன்றாம்பாதநிரூபணம்	5	2
நான்காம்பாதநிரூபணம்	,,	16
பிரணவமாத்திரையின்வர்ணநிரூபணம்	8	21
ஸமஷ்டி ஓங்காரநிரூபணம்	9	22
ஸ்தூலப்பிரணவநிரூபணம்	10	8
பிரணவோபாஸ்திக்கிரமநிரூபணம்	,,	19
ஓங்காரபதார்த்தம்	11	22
ப்ரளயபதார்த்தம்	12	5
ப்ரணவபதார்த்தம்	,,	17
தாரபதார்த்தம்	13	25
விஷ்ணுபதார்த்தம்	14	11
ப்ரம்மபதார்த்தம்	15	1
ப்ரகாசபதார்த்தம்	,,	8
வித்யுத்பதார்த்தம்	,,	28
வ்யாபிபதார்த்தம்	16	13
ப்ரணவபிரசம்சை	17	5
துரீயஸ்வரூபநிரூபணம்	18	15
த்யானநிரூபணம்	19	3
த்யாத்ருநிரூபணம்	,,	15
த்யேயநிச்சயம்	20	2
ஈசனே த்யேயனென்பதற்குஏதுக்கள்	,,	20
த்யானப்பயன்	22	23
த்யானப்பிரசம்சை	23	2
சிவத்யானநியமம்	,,	16
பாராயணப்பயன்	24	5
தாத்பரியசங்கிரகம்	25	2
அரும்பதவிளக்கம்	27	2
இலக்கணக்கொத்து	29	3

அதர்வசிகோபநிடதத்தின்பிழைதிருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
க	க	விஷயா	வசனா
உ	ய	ஷை	ஷை
க	கங	[illegible]	[illegible]
உ	கக	[illegible]	[illegible]
உ	கங	[illegible]	[illegible]
ங	க	[illegible]	[illegible]
உ	கஅ	பகஎன்று	பகவஎன்று
,,	உய	ஆதிகாலத்தில	ஆதிகாலத்தில்
,,	,,	ஆதிசிருஷ்டியில	ஆதிசிருஷ்டியில்
,,	உக	வழஙகியது	வழங்கியது
ங	கூ	தககது	தக்கது
,,	உஉ	மும்	ம்
,,	உஉ	நிரூபிக்கப்படுகின்ற	நிரூபிக்கின்ற
,,	உரு	தெனபது	தென்பது
ரு	கச	வேதஙகளறித	வேதங்களைத
எ	கசா	இதருதகளின	இதமருத்தக்களின்
அ	கரு	யெனத	யென்ற
கக	ச	அதனுடன்பேத	அதனுடனபேத
,	உச	பொருளாய்	பொருளாய
கங	கசா	கைமது	கையைமது
	உஉ	பதாாத்த	பதார்த்த
கச	உய	[illegible]	[illegible]
கஎ	க	துடன்பின்ன	துடனபின்ன
	கஎ	சொப்பணம்	சொப்பனம்
கஅ	உஅ	ஆதியிலதோ	ஆதியில்த்தோ
உச	ஙரு	சிம்கா விருத்தி	சிகாபதவிவிருத்தி
உஅ	கக	மறுத்து	மருத்து
,,	,,	தேவதை	தேவதைகள்
	கச	சொற்றடர்	சொற்றொடர்
	உச	சர்வகன்ம	சர்வசங்கார

அதர்வசிகோபநிடதத்தின்

முகவுரை.

இவ்வதர்வ சிகோபநிடதமென்பது அதர்வண வேதத்தின் ஒன்பது சாகைகளில் ஒன்றன் உபநிடதம். இதனை நம்நாட்டிலுள்ள சைவ வைஷ்ணவாதி சித்தாந்த வாதிகள் அடிக்கடியெடுத்துத் தமது சித்தாந்த நூல்களில் விசாரிக்கும் வழக்கமுண்டு. இது பிரணவவித்தையை விசேஷித்து நிரூபிப்பதொன்றாய் அதர்வசிர உபநிடதத்தின் தாத்பரியத்தைச் சுருக்கி யுரைத்தாற் போலிருக்கும். இதுவும் சிவாத்வைதவித்தையே. பஞ்சருத்திரங்களில் சுவேதாசுவதரம், அதர்வசிரஸ் முதலானவைகளைப் போல் இதுவும் ஒன்றே. இது பிரணவவித்தையை முதலில் நிரூபித்து அந்தப்பிரணவவித்தையே சிவஸ்வரூபமாக உபாஸிப்பதற்கு வேண்டிய கருவிகளையுங்கூறி அந்தப் பிரணவத்தை சிவாபின்னமாய் உபாஸிக்கும் வழியைக்காட்டி அதர்வசிரம் நிரூபித்தாற்போல அவ்வுபநிடதத்திற் கூறாத சில சிவநாமதேயங்களையும் நன்றாகப் பொருட்படுத்தி பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் என்ற குணமூர்த்திகள் மூவருக்கும் துரீயனும் காரணனும் உள்ளவன் ஈசானனெனக் காட்டி மோட்சேச்சுக்களுக்கு அவனை உபாஸ்யனெனவும், அவனே பிரணவத்தின் நான்காவது அர்த்தமாத்திரையின் பொருளெனவும் நிரூபித்து, மாண்டூக்கியம், அதர்வசிரம் முதலிய ஏனைய அதர்வணோபநிடதங்களின் கருத்தை நன்கு விளக்குகின்றது. இது பகவத்பாதசங்கராசாரியரால் இந்த பொருள் உரித்தேயென நரசிம்மோபநிடத வியாக்கியானத்தில் துணியப்பட்டது. அதனிடத்து பிரணவத்தின் நான்காம் மாத்திரையின் தேவதையைச் சொல்வதற்காக இதிற் கண்ட வசனங்களை அநுவதிக்கப்படுதலால், அதனிடத்து அச்சொல்லுக் குணாசெய்யு மாசிரியர் சோமனென்ற சொல்

னுக்குச் சிவனென வுரையிட்டிருப்பதே இதற்குச் சான்றா கும். அதுவும் அதர்வண வேதத்துஞ் சேர்ந்தவுபநிடதமாத லால் இதற்குமதற்கும் ஒருபொருள் படவே சொல்வது உசிதமேயாம். ஆக இவ்வுபநிடதத்தில் சிவாத்வைத சித்தாந்தங் கூறப்படுவதில் அத்வைதிகளுக்கேதுபாட்டேயில்லை. வைஷ்ணவர்களாகிய விசிஷ்டாத்வைதிகளும் அதர்வசிகாவிலாசம் முதலிய பெருநூல்களால் இதற்குத் தம் மதத்துக்கேற்ற பொருளை காட்ட முயன்றார்கள், முயலுகின்றார்கள். எவரும் இஃதப்பிரமாண மென்றாரிலர். இதன் பொருள்கள் விரிவாகப் புராணங்களில் நிரூபிக்கப்பட்டன. இது பிரணவசிவாத்வைத நிட்டையை உதாவசிரம விரித்தாற்போல் அவ்வளவு விரிக்காமற்போயினும், சிறிது சுருக்கி நிரூபித்தமையால், பஞ்சருத்திரங்களிலொன்றாகச் சேர்க்கப்பட்டது. இவ்வுபநிடதத்திற்கு பிரதிவாதிகள் கூறும் பல ஆட்சேபங்களை மறுத்து விரிவாய்ச் சுதாகரமென்ற பெயருடன் ஓர் விரிந்த வுரையும் அதர்வசிகாபதவிருத்தியென்ற ஓர் சிற்றுரையும், வடமொழியிலெம்மா லியற்றப்பட்டுளது. அவற்றுள் இவ்வுபநிடத வியாக்கியான முறையில் சிற்றுரையே தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. அதனை சாம்பவ சிகாமணிகளேற்று ஆக்கியோனுக்காசி கூறுமாறு வேண்டுகிறோம்.

சுபம்.

கிரந்தகர்த்தர்

ஸ்ரீரஸ்து

[illegible]

——()——

[illegible]

ஓம்॥ [illegible]

[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

[illegible] ॥

[illegible] ॥

உ

சிவமயம்.

அதர்வசிகோபநிடதச்

சிற்றுரை.

அவதாரிகை

இனி யெல்லாவுபநிடதங்களுக்கும் பொதுவான 'அக்ஷ மாலிகை'யென்ற வெழுகொண்டு பிரணவவித்தை நிரூபிக்கப்படுகின்றது.

𑌅𑌥 𑌹𑍈𑌨𑌂 𑌪𑍈𑌪𑍍𑌪𑌲𑌾𑌦𑍋𑌽𑌙𑍍𑌗𑌿𑌰𑌾𑌃 ।

𑌸𑌨𑌤𑍍𑌕𑍁𑌮𑌾𑌰𑌶𑍍𑌚𑌾𑌥𑌰𑍍𑌵𑌾𑌣𑌮𑍁𑌵𑌾𑌚 ॥ என்று

(இ—ள்) இனி ஸர்வப்பிரசித்தனான இந்த ஆதர்வண முனியை பைப்பலாதரும், அங்கிரஸ்ஸும், ஸனத்குமாரரும், வினவினர். எ—று.

(வி—ரை.) ஸர்வப்பிரசித்தன் = '[illegible] [illegible]' = உன்னையல்லவோ அதர்வரிஷியின் புத்திரனாகிய தத்தியங் என்ற ரிஷி உபாஸித்தார். தத்தியங் என்பவர் அதர்வணன் புத்திரர் என்பதாதி வேதபாகங்களில் அதர்வாவின் புத்திரனாகிய ததீசியின் பிரசித்தி அளவிலாததாதலாலும், இவர் அசுவினி தேவதைகளுக்கும் மதுவித்தையையுபதேசித்தாரென, ரிக்வேதம் முதலியவிடத்திலும் பிரசித்தராதலாலும், இவரை ஸர்வப் பிரசித்தரென்றது. பைப்பலாதர் = பிரம்மபுராணத்தில் இந்த ததீசி மஹரிஷியின் புத்திரர் பிப்பலாதரென நிரூபிக்கப்பட்டமையால், அவர் குமாரரான பைப்பலாதர் இவருக்குப் பௌத்திரராகின்றார். ஸத்

தியவாஹரென்ற பாரத்துவாஜரின் சிஷ்யரான அங்கிரஸ்என்பவர் முண்டகோபநிஷதத்தில் பிரசித்தர். ஸநத்குமாரரோ பிரம்மபுத்திரர். வினவினர் = முறைப்படி ஆசிரியனிடம் சென்று கேட்டார். முறை பிறழ்ந்து கேட்டவர்க்குபதேசிக்கக்கூடாதென நிஷேதமிருத்தலால், முதலில் ஆசிரியனைக் கேட்பது முறையுடன் அனுஷ்டித்துத் தீரவேண்டுமென பிரம்ம வித்தையின் கருத்து.

அவதாரணிகை

இவ்வளவு பெருமை பொருந்திய பெரியோருமறியாத விவினவிஷயந்தான் யாதென விஞநிகழக் கூறுகின்றார்.

ஸமவநு கிம் கநாத்தெளவு யக்ஷரம்
யஶ்ரநம்யஶ்ராயி நவஶ்ச |
கிம் தஶ்ரநம் கொவாயஶ்ரதா
கஶ்சயெஶ்யஃ || என்று

(இ—ள்) ஓரகவ ஆதிகாலத்திலுபயோகித்தது யாது? தியானம், தியானிக்கற்பாலது, தியானமென்பது எது, எவன் தியாதா, எவன் தியேயன்..

(வி—ரை) பகவ என்று வினித்தமையால் ஞானம் வைராக்கியம் முதலிய நற்குணம் நிறைந்த ஆசிரியன் அவனெனக்குறிக்கப்பட்டது, ஆதிகாலத்தில் = ஆதிசிருஷ்டியில; உபயோகித்தது = பிரம்மா முதலிய பரமாசாரியர்கள் வழங்கியது. அவ்வகையட்சரம் யாதென்பது வினாவின் கருத்து. தியானம் = அதனையெப்படிச் சிந்திப்பது. தியானிக்தற்பாலது = அதற்குள் முறைகளமைந்தால் தியானம் பூர்ணமாகும். எவ்வித இலக்கணங்களுடன் அவ்வட்சரங்களை தியானிக்க வேண்டுமென்பது கருத்து. தியானமென்பது எது = அதனை சிந்திக்தற்கேற்ற கருவிகளெவை? எவன்தியாதா = தியானம் செய்பவருள் சர்வப்பிரசித்தனாயுள்ளவனெவன்? அவன் தியேயன் = மந்திரத்தால் வழிபடத்தக்கவனானவன். எ—து

அதர்வசிகோபநிடதம்

அவதரணிகை

மேற்கண்ட அறுவகைக் கேள்விகளுக்கும் முறையே விடையாய் நல்லுபதேசங் குறிக்கின்றார்.

[illegible]
[illegible]
[illegible] || என்று

(இ—ள்) அவர்களுக்கு அந்த அதர்வா உபதேசித்தார். பிரணவாட்சரமே ஆதியில் உபதேசிக்கப்பட்டது. அதுவே தியானம் அதுவே தியானிக்கத்தக்கது. என்று

அவதரணிகை.

இவ்வளவுபெருமை ஓம்காரத்துக்கு வந்ததற்குக் காரணம் இஃதெனக் குறிக்கின்றார்.

[illegible]
[illegible]
[illegible] ||

(இ—ள்) இவ்வட்சரம் பரப்பிரம்மசொரூபம். இதன் நான்கு பாதங்களும் நான்குவேதங்கள். நான்கு பாதங்களுடன் கூடிய இவ்வட்சரம் பரப்பிரம்மம்.

(வி—ரை.) சொல்லுக்கும் பொருளுக்குமமைந்த அபேதத்தால் பிரணவமே பிரம்மமென உபசரிக்கப்பட்டது. அதர்வசிரசிலும் அப்படியே நிரூபிக்கப்பட்டமையுமெலன்க. இவ்வுபநிடதமும் அதனையே மேலே நிரூபிக்கப்படுகின்றமையால் இவ்வட்சரத்திற்கு நான்கு வேதங்களும் நான்கு பாதங்களென்றால் இவ்வட்சரத்தின் பொருளே நான்குவேதங்களிலும் நிரூபிக்கப்படுவதெனபது சொல்லப்பட்டது. ஆகவே சர்வவேதங்களும் எப்பொருளையுணர்த்துமோ அப்பொருளை இஃது ஒன்றேகொடுக்குமாதலால் இஃதே முமுட்சுக்களுக்கவசிய மென்றதாயிற்று. பாதங்களென்பன அம்சங்களே.

அவதரணிகை.

ஒவ்வொரு பாதத்திற்கும், தியானத்திற்கும்வேண்டிய குணங்களை விதிக்கின்றார்,

ப்ருதி²வ்யகார꞉
ஸ ருக்³பி⁴ர்ருக்³வேதோ³ ப்³ரஹ்மா
வஸவோ கா³யத்ரீ
கா³ர்ஹபத்ய꞉ || என்று

(இ—ள்) இதன் முன்மாத்திரை பிருதிவி, அகாரம் அது ரிக்குகளுடன்ரிக்வேதம்பிரம்மாவசுக்கள் காயத்ரீகார்ஹபத்தியம். எ—று

(வி—ரை) பிருதிவியென்பதுபூதங்களிலொன்று, அகரம்மாத்திரையிலொன்று. ரிக்குகள்=பாதவிவஸ்தையுடைய மந்திரங்கள். பிரம்மா அதற்குதேவதை. வசுக்களென்றனண்மர்பிதுருக்கள், காயத்திரீசந்தம், கார்ஹபத்தியமக்கினி.

அவதரணிகை

இனி இரண்டாம்மாத்திரையின் இலக்கணத்தைக் குறிக்கின்றார்.

த்³விதீயாந்தரிக்ஷம் ஸ உகார꞉
ஸ யஜுர்பி⁴ர்யஜுர்வேதோ³
விஷ்ணூ ருத்³ராஸ்த்ரிஷ்டுப்³ த³க்ஷிணாக்³நி꞉ || என்று

(இ—ள்) இரண்டாவது மாத்திரையந்தரிக்ஷம், அது உகாரம். அது யஜுஸ்சுகளுடனே கூடியயஜுர்வேதம். விஷ்ணு, ருத்திரர்கள், திருஷ்டுப், தட்சிணாக்கினி எ—று.

(வி—ரை) அந்தரிட்சமென்பது ஆகாயத்தைக்குறித்தது. அதனிடையே உள்ள உலகங்கள் குறிக்கப்பட்டன, இசையும் யாப்புமில்லாவேதபாகங்கள் யஜுஸ்ஸெனப்படும். ருத்திரர்கள் பிதுருக்கணத்திலுள்ளவர். மற்றதுவெளி.

அதர்வசிகோபநிடதம்

அவதாரணிகை

இனிமூன்றும்மாத்திரையின் உருவத்தைக் குறிக்கின்றார்.

த்ருதீயா த்யௌர்லோகஸ் ஸ மகார:
ஸ ஸாமபிஸ் ஸாமவேத: |
ருத்ரா ஆதித்யா:
ஜகத்யாஹவநீய: || என்று

(இ—ள்) மூன்றாவது த்யுலோகம், அது மகாரம், ஸாமங்களுடன் கூடியஸாமவேதம் ருத்திரன் ஆதித்தியர்கள் ஜகதி ஆஹவனீயம் எ—று

(வி—ரை.) த்யுலோகம் = சுவர்க்கலோகங்கள். அந்தரிட்சத்துக்கு மேற்பட்டவை. ஸாமங்களென்பது இசையுள்ள வாக்கியங்கள். இம்மூன்றும் 'பூ:' முதலியவியாஹிருதிகளின் பொருள். 'பூ:' என்பது இவ்வுலகம் 'புவ:' என்பது அந்தரிட்சம். 'ஸுவ:' என்பதுஸ்வர்க்கம்என்றுவேதங்களறிதலாலெனக

அவதாரணிகை

இனி நான்காவது அர்த்தமாத்திரையின் சொரூபத்தை நிரூபிக்கின்றார்-

யாவஸாநே(அ)ஸ்ய சதுர்த்யர்த்தமாத்ரா
ஸா ஸோமலோக ஓங்கார:
ஸாதர்வணைர் மந்த்ரைரதர்வவேத:
ஸம்வர்த்தகோ(அ)க்நி:
மருதோ விராடேக
ருஷிர் பாஸ்வதீ ஸ்ம்ருதா: என்று

(இ—ள்) இதன் கடையிலுள்ள நாலாவதான அர்த்த மாத்திரைஒன்றுண்டு- அதுஸோமலோகம், ஓங்காரம். அதர்வணமந்திரங்களுடன் கூடிய அதர்வணவேதம், சம்வர்த்த

ஸாக்னி, மருத்துக்கள், விராட், ஏகரிஷி, பாஸ்வதியென்று சொல்லப்படும்,

(வி—ரை) இந்தப்பிரணவத்தின் கடைசியில், அதாவது அதிசூக்ஷ்மமாய் அகார உகார மகாரங்களுக்கப்பால் எந்த மாத்திரையுளது, அதுவே அர்த்தமாத்திரையாம். அது மிக சூக்ஷ்மமான நாதரூபம் அதற்குப் பொருள். ஓங்காரம = சிவன். பிரம்ம விஷ்ணு ருத்திரர்கள் மூன்று பாதங்களுக்குப் பொருளாதலாலும் "[illegible] ஓங்கார: = இவரேயதனால் ஓங்காரனெனப்படுவான்" "தஸ்மாதுச்யதே ஓங்கார: = அதனால் ஓங்காரனெனப்படுகின்றான்', என்று அதர்வசிரத்தில் நிரூபிக்கப்பட்டமையால். ஸோமலோகம் = ஸோமனென்ற உமாபதியின் லோகம், "[illegible] = அதன்மேலில் உன்மனலோகமுண்டு, அதன் மேல் ஸோமலோகம் அப்ரகாசிதமாயுள்ளது' என்ற புராணவசனத்தை யனுசரித்து இவ்வசனத்தை நரசிம்மதாபினியோபநிஷத்தில் ஸ்ரீ ஜகத்குருஸ்வாமிகள் வியாக்கியானம் செய்யுமிடத்து உமையுடன் கூடிய சிவனென்ற பொருளை ஸோமனென்ற சொல்லுக்கிட்டு அதற்குச் சந்திரலோகமென்று பொருள் கொள்ளும் பக்ஷத்தில் [illegible] மாத்திரையின பொருளாகிய சுவர்க்க லோகங்களுக்குள்ளடங்குமென்றும் கூறியது கூறலென்ற குற்றம் வருமென்றும் குறைகூறினமையாலும், மற்று "[illegible] = அவர்கள் ஸோமனையடைவார்கள் என்றவிடத்து ஆசிரியர் முதலியோர் ஸோமனென்ற சொல்லுக்கு சிவனென்றே பொருளுரைத்தமையாலுமென்க. அம்மாத்திரை அதர்வணமந்திரங்களுடன் கூடிய அதர்வணவேதம். அதர்வணவேதத்தில் அநேக மஹாமந்திரங்களிருப்பதால் = ஸம்வர்த்தகாக்னி. மஹாக்கிராஸன் என்று சொல்லக்கூடிய தாரீயசிவன். மருத்துக்கள் = பிதுருக்களுக்குப் பிரதானஸ்தானமாயுள்ளவர்கள். விராட் = சந்தம். ஏகரிஷி = ஆதர்வணர்களின் அக்னி, [illegible] = ஏகரிஷியைப் பிரத்தியுடனுபாஸிப்பவன். அதர்வணம் என மூன்றுகட் கூறுதலால். கௌசிக சூத்திரத்திலும் இதன் விரிவு

ந்து. பாஸ்வதீ = ஒர்சக்தி; இது நான்காம்மாத்திரையில திகம். பட்டநாராயணன் [illegible] குறிச்சசந்தம் எழுத்துக்களுக்கே உள்ள [illegible], இம்மாத்திரை எழுத்தன்று [illegible]. இவ்விடத்தில் [illegible] இந்த அப்பாடமென்றார். அதாவது. [illegible] வியாக்யானத்தில் [illegible] இப்பாடத்தையேற்று வியாக்யானம் செய்தமையாலும், ஆசிரியர் [illegible] அப்படியே பாடத்தை [illegible] வியாக்யானம் செய்தமையாலுமென்க. ஆயின், அவ்விடத்துச் [illegible]. நாராயணீயத்தில [illegible] எனற பாடத்தைப் [illegible] [illegible] வியாக்யானம் [illegible] [illegible] [illegible] கருதி [illegible] [illegible] [illegible] இத்தகைய [illegible] [illegible] சொல்லப் [illegible] மூலத்து [illegible] மே [illegible] [illegible] க்கபட்டன. [illegible] [illegible] வியக்தியில் [illegible] கள்திருந்தார்கள்; [illegible]

[illegible]

[illegible] = ஆதித்யமண்டலத்தினிடையே உள்ள [illegible] தேஜன் காலகாலன், மஹாப்ரபு, சர்வஸம்ஹாரம்செய்பவன், சாக்ஷி, சின்மாத்திரமாயுள்ளவன்; [illegible] டையவன் திருடத்தைத்தாம் தத்துவமாதலால் அவனிருப்பதாருவதாகும். அவன் மகேச்வரன்'' என்பதாதி அம்மஹான் இருக்கின்றனர். அப்படியே '[illegible] சாந்தமான

கனென சிவனே நாலாம் மாத்திரையின் தேவதையாக எண்ணுகிறார்கள்' என்று மாண்டூக்கிய வாக்கியத்தை நரஸிம்மதாபனத்தில் வியாக்கியானம் செய்யும்பொழுது சிவமென்பதற்கு சங்கரனென்று வியாக்கியானம் செய்திருக்கிறார்கள். இதனால் பிரணவத்தின் துரீயபாததேவதை சிவனென்றே அவர்கள் சம்மதமாயிற்று, ஓங்காரமென்பதும் பிரம்மா விஷ்ணு ருத்திரர்களுக்கு மேலான துரீயமூர்த்தியை குறிப்பிடுவதென்பது நாட்டப்பட்டது. அவர்கள் இந்த மந்திரத்தை பூர்வதாபனத்தில் வியாக்கியானம் செய்யும்பொழுது அகார உகார மகார அர்த்தமாத்திரைகளுக்கு முறையே பூமி அந்தரிக்ஷம் சொர்க்கம் ஸோமலோகம் இந்தலோகங்களும், ரிக் யஜுஸ் ஸாமம் அதர்வவேதங்களும் பிரம்ம விஷ்ணு ருத்திர ஸம்வர்த்தகாக்கினி மூர்த்திகளும், வசுருத்திராதித்திய மருத்துக்களென்ற பிதுருக்களும், காயத்ரீ, த்ருஷ்டுப், ஜகதீ, விராட், என்ற சந்தங்களும், கார்ஹபத்திய தக்ஷிணாக்கினி, ஆஹவனீய, ஏகர்ஷியென்ற அக்கினிகளும், பொருளெனவே வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கின்றது. ஆகவே இவ்வளவால் பிரணவத்தின் நான்கு மாத்திரைகளும் ஒருவாறு நிரூபிக்கப்பட்டன.

அவதாரிகை

இனி வர்ணங்களுக்குள்ள உருவத்தையும், தேவதைகளையும் குறிக்கின்றார்-

ப்ரத²மா ரக்தபீதா
மஹத்³ ப்³ரஹ்மதை³வத்யா ।
த்³விதீயா வித்³யுமதீ க்ருஷ்ணா விஷ்ணுதை³வத்யா ॥
த்ருதீயா ஶுபா⁴ஶுபா⁴ ஶுக்லா ருத்³ரதை³வத்யா ।
யாவஸானேऽஸ்ய சதுர்த்²யர்த⁴மாத்ரா
ஸா வித்³யுமதீ ஸர்வவர்ணா புருஷதை³வத்யா ॥

(இ-ள்) முதல் மாத்திரை சிவந்தும் பீதையாயுமிருக்கும். மஹானாகிய பிரம்மாவை தேவதையாகவுடையது. இரண்டாவது மின்னலுடையது, கரியநிறமுடையது, விஷ்ணு

வைத்தேவதையாயுடையது. மூன்றாவதுசுட்டும் அசுபமும் வெள்ளைநிறமுமுடையது-ருத்திரனைத்தேவதையாயுடையது. இறுதியிலுள்ள அர்த்தமாத்திரை மின்னலுடையது. எல்லா நிறமுமுள்ளது புருஷனைத்தெய்வமாக உடைத்தானது.

(வி—ரை) முதல் மாத்திரை செவந்தநிறமுள்ளது- அதற்குள்ள சக்திபீதையென்ற பெயருள்ளது- அதாவது பொன்னிறமுடையதாம்- இரண்டாவது வித்யுன்மதியென்ற சக்தியுடையது. அதாவது மின்னலைப்போன்ற நிறமுடையசக்தியையுடையது. அதாவது பளபளப்புள்ள வெண்ணிறம்- மூன்றாவதுசுவையென்றசக்தியையுடையது- வெண்ணிறம், ருத்திரனைதேவதையாயுடையது. இறுதியிலுள்ள அர்த்தமாத்திரையின் சக்தியும் லட்சுமியைப்போல மின்னல் நிறமுடையதே. கௌரீதேவியும் சாமளநிறம் எனப்பலவிடங்களில் வர்ணிக்கப்படுதலால், பலநிறமுடையதென்றது சொபாவத்தில் தங்க நிறமுடையதாயினும் கௌரீ, காளீ, துர்க்கை என்று மூன்றவஸ்தைகளில் மூன்றுநிறங்கள் தேவியார்க்கிருப்பதாலெனவுமாம்- அல்லது ஸத்யோஜாதமுதலிய ஐந்துமுகங்கள் ஐந்து நிறமுடையனவென ஸர்வபுராணப்பிரஸித்தமாதலாலும், இது பொருந்துவதிலாட்சேபமில்லை. புருஷனென்ற சொல்லுக்கு ருத்திரனெபொருளென்பதைப்பற்றி புருஷசூக்தபாஷ்யத்தில்விரிவாய்எழுதியிருக்கிறோம்.

அவதரணிகை.

இனி ஓங்காரத்தைபூர்ணமாக நிரூபிக்கின்றார்.

ஸைஷா ஹ்யோங்காரஶ்சதுரக்ஷர:
சதுஷ்பாத:
சதுஶ்ஶிரஶ்சார்தமாத்ர: ॥ என்று

(இ—ள்) இதுவே ஓங்காரம் நாலெழுத்துள்ளது. நான்கு பாதங்களுள்ளது. நான்குதலைகளுள்ளது. நான்காவது அர்த்தமாத்திரையுள்ளது.

(வி—ரை) இது=குறிப்பிட்ட ஓங்காரம். நான்கெழுத்துள்ளது=அர்த்தமாத்திரையையும் எழுத்தென்றது. அது நாதவடிவமாதலால, நான்குபாதங்களுள்ளது. பாதமென்பதம்சம். தலை=பிரதானம். அகாராதிகள் தேவதைகள். நாலகாவது அர்த்தமாத்திரையுள்ளது=நாலகாலதாக அர்த்தமாத்திரையுடையதென்பது அதன் பொருள்.

அவதாரிகை.

இனி ஸ்தூலப்ரணவத்தை நிரூபிக்கின்றார்.

ஸ்தூலம் ஹ்ரஸ்வம் தீர்க்கம் ப்லுதமிதி
ஓம் (௧) ஓம் (௨) ஓம் (௩) என்று.

(இ—ள்) இது ஸ்தூலமானால் ஹ்ரஸ்வம், தீர்க்கம், ப்லுதமென மூவகைப்படும். ஓம். (௧) ஓம் (௨) ஓம் (௩) என்று

(வி—ரை) ஸ்தூலமான இது=வைகரீஸ்வரூபமான இப்பிரணவம். ஹ்ரஸ்வம்=ஒருமாத்திரையுடையது. அது ஸ்வபாதத்திலேயே இரண்டுமாத்திரையுள்ளதாதலால் ௧-வது இரண்டுமாத்திரையும் ௨-வது மூன்றுமாத்திரையும், ௩-வது நான்குமாத்திரையுமென்றறியவேண்டும்.

அவதாரிகை

இனிப் பிரணவோபாஸ்தியை விரிவுடன் சொல்லுகிறார்.

த்ரிருச்சார்ய சதுர்த்தே சாந்தாத்மா
ப்லுதப்ரணவப்ரயோகேண ஸமஸ்தமோமிதி
ப்ரயுக்தாத்மஜ்யோதி: ஸக்ருதாவர்த்ததே॥ என்று

(இ—ள்) மூன்றுமுறையுச்சரித்து நான்காம் முறையில் சாந்தனான ஆத்மா, ப்லுதப்ரணவயோகத்தாலெல்லாம் ப்ரணவமேயென பிரயோகித்தபொழுது ஆத்மஜ்யோதிஸ்ஸானது ஒருமுறை ஆவர்த்திக்கின்றது.

(வி—ரை) மும்முறை உச்சரித்து = இரண்டு மூன்று நான்கு மாத்திரையுள்ள பிரணவத்தை முறையே அப்பியசித்து. நான்கா ம்முறையில் = ஐந்துமாத்திரைப்பிரணவத்தையுபாஸிக்கும்முறையி ல். சாந்தன் = அதனுடன்பேதத்தை யடைந்து எல்லாப் பிரபஞ்ச மும் ஒடுங்கும் ஸ்தானமாய் நிற்பான்- ஆத்துமா = சைதன்னிய மாத்திரன் "ப்ரபஞ்சோபஶமம் ஶாந்தம் ஶிவமத்வைதம் சதுர்த்தம் மந்யந்தே ஸ ஆத்மா ஸ விஜ்ஞேய꞉ ॥ = பிரபஞ்சங்க ளொடுங்குமிடம் சாந்தன் சிவன் அத்வைதன் அவனை நான்காவ தென்றெண்ணுவார்கள்- அவனான்மா- அவனறியத்தக்கவன் என்று மாண்டூக்கியம் முதலான சுருதிகள் கூறுதலால். எப்பொ ழுது துரீயசிவாபேதத்தை அடைவானென்பதைக் குறிக்கின் றார் ஞூதப்பிரணவயோகத்தாலென்பதாதியால்- ப்லுதப்ரண வம் = மாத்திரைவிர்த்தியடைந்தபிரணவம்- அதாவது சுத்தநாத ரூபம்- அவ்விரூபமான யோகமென்றால் தாரகயோகமென்று பொருள்- எல்லாவுலகத்தையும் = ஸ்தாவரம் ஜங்கமமெனப்படும் எல்லாப்பிரபஞ்சங்களையும் பிரணவமென்றே = பிரணவஸ்வரூபமெ ன்றே. பிரயோகித்தபொழுது = உத்தமமான யோகத்தாலறிந்த பொழுது- எல்லாம் பிரணவஸ்வரூபமாய் தாமும் அந்தரூபமாகு ம்பொழுது ஆத்மஜோதிஸ்ஸானது எஞ்சிநிற்குமென்பது இம்ம ந்திரத்தின் முடிந்த கருத்து-

அவதரணிகை

இம்மந்திரமே ஸர்வஸ்வரூபமென்றது அதன்பொருட்பெ ருமையால் அதனை அதன்பொருளுடன் அபேதமாய்க்கொண்ட மையால் என்று குறிப்பாராய் அதன்பொருளாய் பரமேசுவரனது திருநாமங்களிற் சிலவற்றையெடுத்து நிரூபிக்கத்தொடங்கி முதலி ல் ஓங்காரபதார்த்தத்தைக்குறிக்கின்றார்.

ஸக்ருதுச்சாரிதமாத்ர
ஊர்த்வமுந்நாமயதீத்யோங்கார꞉ ॥ என்று

(இ—ள்) ஒருமுறையுச்சரித்தமாத்திரத்தில் உயர்ந்ததை சேர்ப்பதால் ஓங்காரமெனப்படுவார்.

(வி—ரை) உயர்ந்த கெதியென்றால் நிஷ்பிரபஞ்சப்பிரம்மா பேதமே. தாரகத்வமும், ஓங்காரத்துவமும் பரமசிவனுக்குரியதென்பதை பாஸ்கரசுதாகரங்களில் நிரூபித்திருக்கின்றோம்.

அவதரணிகை.

இனிப்பிரளய பதார்த்தத்தை நிரூபிக்கின்றார்

ப்ராணாநாம் ஸம்ஹாரம்.
ப்ரலீயந்தே இதி ப்ரலய:॥

(இ—ள்) பிராணன்களெல்லாம் ஒடுங்குமிடமாதலால் பிரளயமெனப்படும்.

(வி—ரை) எல்லாப்பிராணன்களையும் ஒடுக்கிக்கொள்ளுமிடமென்றால் பிராணன்களை புலகத்துக்குக் கொடுக்கவும் அவைகளைத் தம்மிடமொடுக்கிக் கொள்ளவும் பரமேசுவரனொருவனுக்கே சத்தியும் ஸ்வபாவமுமமைந்திருக்கிறதென்றதுஇதனாற் குறிக்கப்பட்டது இந்தப்பிரளயமென்ற பெயர் வேறு உபனிடதங்களிற் காணப்படாததுளொன்றாம்.

அவதரணிகை

பிரணவ பதார்த்தத்தை நிரூபிக்கின்றார்.

ப்ராணாந்ஸம்ஹ்ருத்ய பரமாத்மநி
ப்ரணாமயதீதி ப்ரணவ:
தஸ்மாத் ப்ரணவ இதி
ஸர்வேஷாம் வேதாநாம் யோநி:
ஸர்வதேவாநாம் ப்ரணவாத்மக:॥ என்று

(இ—ள்) எல்லாப்பிராணன்களையும் பரமாத்மாவினிடத்திலே சேர்ப்பிக்கின்றமையால்பிரணவமெனப்படும். நான்காயிருப்பதால் ஸர்வதேவர்களுக்கும் ஸர்வவேதங்களுக்கும்

காரணஸ்தானம். எல்லாவாச்ய வஸ்துக்களும் பிரணவா
த்மகமாம்,

(வி — ரை.) ஸர்வபிராணவிர்த்திகளையும் பரமாத்மா
வினிடம் சேர்ப்பிக்கின்றமையால்த்தா
ன் இச்சிவதத்துவத்தை பிரணவமென்றும் சொல்லுவதாம், இ
தனால் முடிந்ததைக்குறிக்கின்றார் நான்காயிருப்பதாலென்பதாதி
யால். பரமசிவ ஸ்வரூபமானது பிரம்மவிஷ்ணு ருத்திர துரீயாகா
ரமாய் சர்வவிதமான பிரபஞ்சங்களுக்கும் காரணமாய் நிற்றலின்
அதற்குவாசகமானப்பிரணவமும் நான்காய்நின்று ஸர்வவாசகப்பி
ரபஞ்சத்துக்கு ஹேதுவாய் அதனுடன் அபேதத்தையடையுங்கா
லத்து மூர்த்திதவர்களென்றவாச்யத்துக்கும் வேதங்களென்ற வாசகத்
துக்கும் காரணமென்றுவழிபாட்டின்சௌகரியத்துக்காக நிரூபிக்க
பபட்டது. பிரணவத்தில் பிறந்தசொற்களெல்லாம் பிரணவஸ்வரூ
பமேயாதலால் அதற்குப்பொருளாயமைந்த பரமேசுவரன் எல்லா
ச்சொற்களுக்கும் பொருளாயமையவேண்டுமேயெனவாசங்கைநீக
அவ்வாசங்கை மறுக்கோதுகின்றார் எல்லாவாச்யப்பொருள்க
ளும்பிரணவாத்மகமாம் என்பதாதியால். ஆசுவலாயனர் தமது சூத
திரத்தில் 'ஸவ—ாணிஹவாசுவ) நாமெயாமி —எல்லாமன்
றோ இவன்பேராகும்,, என்றுநிரூபித்தமையால் எல்லாப்பொருள்
களின் கண்ணும் அமைந்த சத்தை சிவஸ்வரூபமேயாதலால் அவ்
விதம் சங்கித்தல்தவறுமென்பதற்குச்சமாதானம். இங்ஙனம்பிரண
வார்த்தத்தில் உபாஸ்தியை நிரூபிப்பதற்காக இப்பதங்களின்
பொருள்களை ஒருவாறு சுருக்கியுரைத்தாரென்க.

அவதாரணிகை

பிரணவம் முதலியசொற்கள் பரமேசுவரன் பெயராயிருப்பி
ன் அச்சொற்களால் அவருக்குவிவஹாரம்எங்கேயிருக்கிறதுஎன்ற
சங்கையைநிவர்த்திசெய்வதற்காக 'நமஸ்தாராய' முதலியவிடத்
தில் மேற்கண்டபதங்களால் ஈசனைவழங்கும் வழக்கமிருக்கிறதெ
ன்பதைக்குறிப்பாராய் தாரபதார்த்தத்தைநிரூபிக்கின்றார்—

தேவாஶ்ச ப்ரீதிஸம்யுக்தா:
ஸர்வே ப்ரணவமேவ ஹி
ஸம்தாரயதி தாரணாத்|| என்று

(இ—ள்) தேவதைகளும் பிரணவமேயென்று நிச்சயிக்கவேண்டும். எல்லாவிதங்களான துக்கபயங்களினின்றும் தாரணம் செய்விப்பதால் தாரணம் என்று சொல்லப்படுகிறது.

(வி—ரை) தேவதைகளும்பிரணவமேயென்று = இது பூர்வவாக்யசேஷம். எல்லா துக்கபயங்களினின்றும் என்ற வாக்கியமானது முன் இயற்கையிலேயே வியாக்கியானம்செய்யப்பட்டது

அவதரணிகை

விஷ்ணுபதார்த்தத்தை நிரூபிக்கின்றார்

ஸர்வே தேவா ஸம்விஶந்தீதி விஷ்ணு: என்று

(இ — ள்.) எல்லாதேவர்களும் எங்கடங்குவார்கள் அவன் விஷ்ணு-

(வி—ரை) எல்லாதேவர்களும் ஒருவரிடத் தடங்குவாரென்றால் அவர் சர்வதேவவியாபகரென்றேற்பட்டது. அதனாற்றான் "ஶிவோ மஹேஶ்வரஶ்சைவ ருத்ரோ விஷ்ணு: பிதாமஹ: ஸம்ஸாரவைத்ய: ஸர்வஜ்ஞ: பரமாத்மேதி முக்யத: | நாமாஷ்டகம் புண்யம் ஶிவஸ்ய ப்ரதிபாதகம் | ரஹஸ்யம் ஸர்வஶாஸ்த்ராணாம் ஸாரம் ஸமுத்ருதம் | = சிவன், மஹேசுவரன், ருத்திரன், விஷ்ணு, பிதாமஹன், ஸம்ஸாரவைத்தியன், ஸர்வஞ்ஞன், பரமாத்துமாவென்று எட்டுநாமங்கள் ஸமஸ்தசாஸ்திரங்களினின்று ஸாரமாகவும் ரகசியமாகவும் எடுக்கப்பட்டன" என்று புராணங்கூறியதும் சத்தியமாயிற்று.

ஸர்வாணி ப்ரும்ஹயதீதி ப்ரஹ்ம|| என்று

(இ—ள்) எல்லாவற்றையும் விரியச் செய்கிறான், ஆதலால் பிரம்மம் எனப்படுவான்.

(வி—ரை) எல்லாவற்றையும் விரியச் செய்கிறான் என்றால் தம்மிடத்தில் பூர்வப்பிரளயங்களில் தம்முள்ளொடுங்கிய பிரபஞ்சத்தை விரியச் செய்கிறானென்பது.

அவதாரணிகை

இனிப் பிரகாசபதார்த்தத்தை நிரூபிக்கின்றார்.

ஸர்வஸ்தாநஜ்ஞாநேந ஹ்ர
தேஹ்யேஹ்ருதி ப்ரதீபவத்
ப்ரகாசயதீதி ப்ரகாச:|| என்று

(இ—ள்) உள்ளே யிருக்கும் தியானயோக்கியமான பதார்த்தங்களை தீபத்தைப்போல் பிரகாசம் செய்விப்பதால் பிரகாசமெனப்படும்,

(வி—ரை) எல்லாப் பிராணிவர்க்கங்களுக்கும் இதயஸ்தானமென்பது மிகச்சிறந்தஸ்தானம். அந்தஸ்தானத்தில் தேவதாத்தியானஞ் செய்யவேண்டி வேறுசாஸ்திரங்களிலும் வேறுபிரகரணங்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றது. அதில் பலதேவதைகளுடைய தியானம் சொல்லப்பட்டமையால் அவைகளிடத்துஞ் சிறிதும் பெரிதுமான தைலமிட்டதிரிகளிடத்தில் அக்கினிபிரவேசித்து அவைகளை காரியோபயோகியர்க்குவதுபோல அத்தேவதைகளையும் அந்தர்யாமியாய் நின்று ஸமஸ்தபயன்களையும் கொடுக்கும்படி செய்விப்பதால் இப்பெயர் ஈசனிடத்தமைக்கப்பட்டதாமென்க. தீபத்தை திருஷ்டாந்தமாய்ச்செய்வதும், பிரகாசமென்றசொல்லுக்கு பிரம்மம்பொருளாய் நிற்பதும், பிரம்மசூத்திரத்தில் விரிந்து கிடைப்பதை சுதாகரத்தே நிரூபித்தோம்.

அவதாரணிகை.

இனிவித்தியுத் என்றசொல்லின் பொருளை விரிக்கின்றார்.

ப்ரகாசேப்ய: பரம் ஜ்யோதி:
சரீரே த்யோதயதி
மஹாமஹிமா வித்யுத்

(இ—ள்) எல்லாப்பிரகாசங்களுக்கும்மேலானதாயிருந்து சரீரத்துள்ளே அடிக்கடி ஓமென்று பிரகாசிப்பதால் வித்தியுத் எனப்படும்.

(வி—ரை) எல்லாப்பிரகாசங்களுக்கும்மேலானது. எல்லாப் பிரகாசங்களுமக்கினியாதிகள். அதற்குமேலானதென்றால்பரமபிரகாசமாகிய பிரம்மசொரூபமேயன்றி வேறில்லை. அது பிரணவரூபமாய் சரீரத்தில் தியானகாலங்களில் மின்னலைப்போல்பிரகாசிக்கின்றமையால் அது வித்தியுத் எனப்படும். வித்தியுத் = மின்னல்

அவதரணிகை.

இனி மகாதேவன் வியாபியென்ற இருபதங்களின் பொருளைக்குறிக்கின்றார்

வ்யாப்ய திசோ திச: ஸர்வா
ஸர்வான் லோகான் வ்யாப்னோதி
வ்யாபயதீதி வ்யாபனாத் வ்யாபீ
மஹாதேவ: என்று

(இ—ள்) திக்குதிக்காக உள்ளே புகுந்து எல்லாவுலகங்களையும் வியாபிப்பதாலும் வியாபிக்கச்செய்வதாலும் வியாபியென்றும் மகாதேவனென்றும் சொல்லப்படுவான்.

(வி—ரை) திக்குதிக்காக உட்புகுந்து = எல்லாத்திக்குகளிலுமுள்ளவஸ்துக்களில் உட்புகுந்து. அந்தர்யாமியாவதால் எல்லாவற்றையும் அனுப்பிரவேசித்து வியாபிக்கச்செய்வதால் தம்மையண்டினவரை சர்வசுவரூபராக்குவதால் வியாபியென்றும்மகாதேவனென்றும் சொல்லப்படுகின்றான். இங்ஙனமோங்காரம் முதல் 'வியாபியென்ற சொல்வரை' எடுத்தசொற்களின்பொருளாய்

அமைந்தமஹேசுவரனை பிரணவத்துடன் பின்னாக உபாசிக்கத் தக்கவனென அதர்வசிரம்கூறியவாறு இவ்வுபநிடதமும் நிரூபித்து முடித்ததாமென்பது முடிவுரை

அவதாரணிகை

இனிமேலே நிரூபித்த பிரணவத்தையே பிரசம்சித்து அதற்குவேண்டியகுணங்களையும் உபாஸ்தியர்த்தமாய் நிரூபிக்கின்றார்.

ஸைஷாப்ரதமாமாத்ராஜாகதி
ஜாகரிதம் த்விதீயாஸ்வப்நம்
த்ருதீயாஸுஷுப்தி:
சதுர்த்தீதுரீயா
மாத்ராமாத்ரா: ப்ரதிமாத்ராமகார:
ஸம்ஸ்க்ருதா நவீவாதாநுஜ்ஞாயதீதி
ஸ்வயம் ப்ரகாசஸ்ஸ்வயம் பவதீத்யேஷா
ஸித்திகாரணத்வாச்ச
யோகநாதேஷு ப்ரயுஜ்யதே॥ என்று

(இ—ள்) இதனது முதன்மாத்திரை விழித்தலென்ற ஜாக்கிரத்து, இரண்டாவது சொப்பனம், மூன்றாவது சுழுத்தி, நான்காவது துரீயம், ஒவ்வொருமாத்திரைகளும் பின் மாத்திரைகளில் லயிக்கும். நன்றாகத்தியானம் செய்தால் முக்தியபதங்களை யுண்டாக்கும், இது ஸ்வயம் பிரகாசம், ஸ்வயமே பிரம்மமாமென இது சித்தியைக் கொடுப்பது, இதனால் யோகிகளில் வினியோகிக்கப்படுகிறது.

(வி—ரை) இந்தப்பிரணவத்தின் முதன் மாத்திரையாகிய அகரம் ஜாக்கிரத்தென்றால் அதற்கபிமானியான பிரம்மதேவன், விசுவம், இரண்டும் குறிக்கப்பட்டதேயாம். இரண்டாவதுமாத்திரைச் சொப்பனமென்பதுமப்படியே. மூன்றும்மாத்திரையுமப்படியே. நான்காவது அர்த்தமாத்திரை. துரீயை. பிராஞ்ஞனுக்

குமேற்பட்டதுரீயனே அங்கு சாட்சியாமென்க. ஒவ்வொருமாத்திரைகளில்லயிகளும், என்றால் அகரம்உகரத்திலும், உகரம் மகரத்திலும், மகரம் அர்த்தமாத்திரையிலும் என்னும்முறையறிக. ஆகவே அர்த்தமாத்திரையில் மகரமும், மகரத்தில் உகரமும், உகரத்தில் அகரமும் உண்டாயிற்றென்றமுறையைக்குறிப்பது முந்திய பதங்களை யுண்டாக்குமெனபதன்கருத்து. ஆதலால் இதுஸ்வயம்பிரகாசம், இதனைமற்றொன்று பிரகாசிக்கச்செய்வதில்லை. இது எல்லாவற்றையும் பிரகாசிக்கச்செய்யும். அதாவது ஆத்துமலைகவல்யஸித்தியைக்கொடுக்கும் என்பது பொருள். இவ்விதம் மொபின்னவப்பிரணவத்தை உபாஸ்திசெய்பவன் தானே, பிரமமமாவானென்பதே பிரம்மம் என்பதாதி சொற்றொடரின்கருத்து. இந்தப்பிரணவஉபாஸ்தியே கைவல்யசாதகமாதலால் இயர்ணம், தாரணம், ஸமாதிகளில இதனையெல்லாசாஸ்திரங்களும் நிரூபிக்கின்றன.

அவதரணிகை

இனி துரீயமானபிரம்மசொரூபத்தைநிரூபிக்கின்றார்-

[illegible]

[illegible]

(இ—ள்) சமஸ்தகரணங்களையுமுபசம்ஹரிப்பதாலும் தரிக்கத்தக்கதைத்தரித்தலாலும், பிரம்மம்துரீயமாம்

(வி—ரை) எல்லாக் கரணங்கள் = எல்லாஇந்திரியங்கள். உபஸம்ஹரிப்பதால் = விருத்திகளை நசிக்கச்செய்வதால் தரிக்கத்தக்கது = பிரம்மவிஷ்ணுருத்திரதுரீய மூர்த்திகள். அவையே பஞ்சகாரணங்களில்உபயோகப்படுதலாலென்க. அவற்றைத்தரித்தலால் = பக்தர்பரிபாகத்துக்கேற்றவாறு அவ்வம்மூர்த்திகொண்டருளுதலால். பிரம்மம்துரீயம் = பிரும்மமானது எல்லாவஸ்துக்களுக்குங்காரணமாகின்றது

(எ—து)

அவதரணிகை.

இங்ஙனம் ஆதியிலகூறப்பட்ட ஆறுபிரச்சனங்களில்எஃது முதவில்உபயோகிக்கப்பட்டது? தியானமெது? தியானிக்கக்கடவதுஎது?

என்றமூன்றுகேள்விகளுக்கும் ஸமாதானித்து பிரமம் துரீயமென்றுகுறிக்கும் தியானம், தியாதா, தியேயன் இம்மூன்றையும் முறையே நிரூபிக்கின்றார்-

𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑌣𑌾𑌨𑌿 𑌮𑌨𑌸𑌿 𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌪𑍍𑌯
𑌧𑍍𑌯𑌾𑌨𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 ॥

(இ—ள்) எல்லாக்கரணங்களையும் மனதில் ஒடுக்கி தியானிப்பதே விஷ்ணு.

(வி—ரை) எச்சமயத்தில் ஸ்தூலசரீரத்தமைந்த ஞானேந்திரியங்களை மனதிற்கு வசப்படுத்தித் தியானம் அமைகின்றது அதாவது சொப்பனம்போன்ற அவஸ்தையுண்டாகின்றது. அவ்வித யோகாவஸ்தையே விஷ்ணு சொரூபமாம் என்றால் அவ்வவஸ்தையைப்பெற்றவன் ஸாட்சாத் நாராயணனென்றே உபசரிக்கப்படுவானென்று குறித்ததாயிற்று.

அவதரணிகை

மேலே உத்தமமான வேறு அவஸ்தையைக்குறிக்கின்றார்

𑌪𑍍𑌰𑌾𑌣𑌂 𑌮𑌨𑌸𑌿 𑌸𑌹 𑌕𑌰𑌣𑍈𑌃 𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌪𑍍𑌯
𑌧𑍍𑌯𑌾𑌤𑌾 𑌰𑍁𑌦𑍍𑌰𑌃 ॥ என்று

(இ—ள்) பிராணன்களையும் இந்திரியங்களுடன் மனதில் சேர்த்து தியானிப்பவன் ருத்திரன்.

(வி—ரை) பிராணன்களையுமென்பதால் சூக்ஷுமசரீரதத்துவங்களை மனதெனப்படுமவித்தையினிடமொடுக்கி சுழுத்தியைப்போல் சொரூபமாத்திரமாய் நிற்கும்யோகாவஸ்தையுடையோர், ருத்திரனெனவுபசரிக்கப்படுவான், என்பதிம்மந்திரக்கருத்தாதலால் ஆறாவதுகேள்வியின் சமாதானமாக தியானத்துக்குவிஷயமென நிரூபிக்கப்படும் ருத்திரன் இங்கு தியாதாவென நிரூபிக்கப்பம் ருத்திரனினும் வேறெனக்குறிக்கப்பட்டது. ஒருவனே தியானஞ் செய்பவனும், தியானம் செய்யப்படுபவனுமாதல் கூடாதகாரியமாமென்க.

அவதரணிகை.

மேலே தியானிக்க யோக்யமாம் துரீயத்தையுபதேசிக்கின்றார்.

ப்ராணம் மனஸி ஸஹ கரணைர்
நாதாந்தே பரமாத்மனி ஸம்ப்ரதிஷ்டாப்ய
த்யாயீதேசானம் ப்ரத்யாயிதவ்யம்॥

(இ—ள்) பிராணத்தை கரணங்களுடன் மனதிற் சேர்த்து (அதனை) நாதத்தினந்தமாகிய பரமாத்மாவினிடத்தில் தொடுத்து ஈசானனைத் தியானம் செய்யவேண்டும், விசேஷமாகத் தியானஞ் செய்யவேண்டும்.

(வி—ரை) நாதாந்தமென்பது அர்த்தமாத்திரைக்குத் தேவதையாயுள்ள காரண பிரும்மஸ்வரூபம். அதுவே யிங்கு ஈசானனென்ற பதத்தாற் குறிப்பிடப்பட்டது. அது ப்ரம்ம ஸூத்திரங்களின் கோசங்களிலும் ஜகத்காரண ப்ரம்மத்தின் பெயராக வழங்கும் சிவநாமமாம். விசேஷமாகத் தியானஞ் செய்யவேண்டுமென்றது, இதன் மேலொன்றுபதேசிக்கப்படாததின்மையால் இம்மூர்த்தியையே தானென இடையறாது தியானிப்பவர்க்கே முத்திகைகூடுமென்பது இவ்வித்தையின் கருத்தாயிற்று.

அவதரணிகை

ஈசனுக்குள்ள அனேகருட் டிருமேனிகளுக்குள் துரீய சிவமூர்த்தியே தியானிக்கத்தக்கதென்பதற்குள்ள ஏதுக்களை நிரூபிக்கின்றார்.

ஸர்வமிதம் ப்ரஹ்மவிஷ்ணுருத்ரேந்த்ரா:
தே ஸம்ப்ரஸூயந்தே ஸர்வாணி சேந்த்ரியாணி
ஸஹ பூதைர் ந காரணம்
காரணானாம் த்யாதா
காரணம் து த்யேய:

ஸர்வைஶ்வர்யஸம்பந்ந: ஸர்வேஶ்வர:
ஶம்புராகாஶமத்யே த்யேய: என்று

(இ — ள்) இவையெல்லாம் பிரம்ம விஷ்ணு ருத்திரேந்திரர்கள். அவர்கள் பிறக்கின்றார்கள், ஸமஸ்தமான இந்திரியங்களும் பூதங்களுடன் (பிறக்கின்றன.) காரணம் பிறப்பதில்லை. காரணங்களை சிருஷ்டிப்பவனும் தியானிப்பவனுமான காரணனன்றோ தியேயன். ஸர்வைசுவரியங்களு முடையவன், ஸர்வேசுவரன், சம்பு, ஆகாயத்தின் நடுவிலுள்ளவன்.

(வி — ரை.) இவையெல்லாம் = யாம் காணும் பிரபஞ்சங்களெல்லாம். பிரம்ம விஷ்ணு ருத்திரேந்திரர்கள் = பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், இந்திரன் என்ற நான்குமூர்த்திகளால் சிருஷ்டிக்கப்பட்டனவே. அவர்கள் பிறக்கின்றார்கள் = அவர்களுக்கும் பிறவியென்னும் பெரும்பிணி நீங்கிற்றிலது, ஆகவே யவர் தியானிக்க யோக்கியரல்லரென்பது கருத்து. அற்றேல், உலகத்தாருய்யும்பொருட்டுக் கருணை மேலிட்டாலருட்டிருமேனிகொண்டவதரிக்கின்றோமாமெனின், அங்ஙனமன்று; அவர் பிறப்பென அவர்களை மொழிகின்றார் மேற்சொற்றொடர்களால். எல்லா இந்திரியங்களும் எல்லாப்பூதங்களுடன் = ஞானகர்மேந்திரியங்கள் படைப்பவனிச்சைக்கேற்றவாறு பரிணமிக்கின்றனவோ, அங்ஙனமே பிரம்மாதிகளுமென்றது தாத்பரியம். இங்ஙனம் தன்னிச்சையாலன்றி பிறரிச்சையாலாவது பிரம்மாதிகள் பிறக்கின்றாற்போல் காரணமும் எங்ஙனும் பிறக்குமோவெனின், அஃது அங்ஙனமில்லையென்கின்றார் காரணம் பிறப்பதில்லை யென்பதால். பூதங்கள், இந்திரியங்கள், பிரம்ம விஷ்ணு ருத்திர இந்திரர்கள் இவர்களுக்குக்காரணமான பரமேசுவரமூர்த்தியெங்கும் பிறப்பதில்லை. அதனிலக்கணந்தான் யாவெனச்சங்கை நிகழக் குறிக்கின்றார் காரணங்களினென்பதாதியால். உலககாரணங்களென்று வேதங்களிற் குறிக்கப்பட்ட பிரம்மாதிகாரணவஸ்துக்களுக்கும், ஆகாசாதிகளுக்கும் அவனே காரணமென்பது சிருஷ்டிப்பவனென்பதின் கருத்து. தியானிப்பவன் = ஆதிசிருஷ்டியில் அவ்வச்சீவர்களின் கன்மவிபாகங்களுக்கேற்

றவாறு தனுகரணாதிகளைச் சங்கற்பிப்பவன். ஆதலாற்றான் காரணன் = பரமகாரணன், அவனன்றோ தியேயன் என்றால், அவனின்றி மற்றவர்க்குத் தியானயோக்கியதை உண்டாக்கத்தக்க குணங்களில்லையென்பதேதற் பட்டது. அவன் பெருமையையே சிறப்பிக்கின்றார் ஸர்வைசுவரியங்களுமுடையவன் என்பதாகியால். ஸர்வைசுவரியங்களென்றால், பிறவியென்ற பிணி நீங்காதுழி பிறர் சங்கற்பத்திற்கும் கர்மத்திற்கும் வசப்பட்டே திரவேண்டுமாதலின் அவ்விதக்குற்றமணுகப்பெறாத அப்புனிதுடைய எம்பிரானொருவனே ஸர்வ சுதந்திரனானென்பது அச்சொற்பொருள். இவ்விதமவனுக்குழக்க முண்டோவெனின், அதனைக் குறிக்கின்றார் ஸர்வேசுவரனென்று. ஸர்வேசுவரன், பரமேசுவரன் மகேசுவரனென்றும், ஈசுவரனென்றும் பெயரவ்வொருவனுக்கேயன்றி மற்றெவருக்குமமையாது பற்றி அவர்பெருமை பிரம்மவித்தைவியந்தோதிற்றென்க. அவன் பெயர்தான் யாதெனிற் குறிக்கின்றார் சம்புவென்று. அநேகவேதங்களிலச் சம்புவென்ற சொல் வழங்கப்பட்டிருக்கின்றமையால், அதனைக் காட்டினார். அவனை வ்விடத்தில் தியானிக்கத்தக்கவனென்பதைக் குறிக்கின்றார் ஆகாயமத்யேவென்று. ஆகாயமென்பது இதயத்தினடுவே யமைந்தவாகாயம். முக்கியமான தியானஸ்தானமாதலால் அதனைக் குறித்தார். இதற்குக் கைலாசமெனப் பொருளுரைப்பாருமுளர். அண்டத்திற் சோமலோகமும் பிண்டத்தில் இதயமும் துவாதசாந்தமுமென்பது சித்தமாம்.

அவதரணிகை.

தியானத்தின் பயனைக் குறிக்கின்றார்.

[illegible]

[illegible]

[illegible] ॥ என்று

(இ—ள்) இவ்விதம் தியானம் செய்தால் ஒருமுறை தியானத்தால நூறு நூறாயிரங்களை எழுபத்துநான்குமுறை செய்தவனுக்கெத்தப்பயனோ அதுகிடைக்கும்.

அவதாரணிகை.

மேலே பிரணவோபாஸகன் பலமானது. அந்தப்பிரணவவாச்சியனும் பிரணவா பின்னனுமான ஈசுவரன் ஒருவனாலேயே அறியப்படுமெனப் புகழ்கின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] என்று

(இ...ள்) ஓங்காரத்தின் சொரூபத்தையெல்லாவற்றையும் ஸர்வவிதமான தியானங்கள் யோகங்கள் ஞானங்கள் இவற்றின் பயனையும் ஓங்காரனையறிவான் பரமேசுவரனையறிவான். எ-று

(வி—ரை) இதையறிந்தவன் ஓங்காரசொரூபனும் பரமசிவசொரூபனுமாவானென்பதிதன் கருத்தே.

அவதாரணிகை.

இனிச் சித்தாந்தத்தையுபசங்கரிக்கின்றார்.

[illegible]
[illegible]
[illegible] என்று

(இ—ள்) சிவங்கரனான சிவனொருவனே மற்றெல்லாவற்றையும்விட்டுத் தியானிக்கத்தக்கவன். அதர்வசிகை முடிந்தது.

(வி—ரை) சிவங்கரன் = மோட்சமென்ற சிவத்தைக்கொடுப்பவன். ஆதலாற்றான் சிவனொருவனே தியானிக்கத்தக்கவன். 'எங்ஙனம் இருந்து' என வினா நிகழ, அதற்கு விடையளிக்கின்றார் எல்லாவற்றையும் விட்டென்று. அதாவது ஸர்வஸந்நியாஸத்தைச்செய்து கொண்டவர்க்கும் சிவோபாஸ்தி விடாதென்பதேற்

பட்டது. அதர்வசிகைமுடிந்தது. = இனிவேறுஉபதேசம் செய்யவேண்டியது யாதுமில்லாமையால் தனது பரிபூர்த்தியை ப்ரம்ம வித்தை தானே கூறி மகிழ்ந்தனளென்பது ஒர்சிறிது.

அவதரணிகை

இனிபாராயணத்தின் பயனைக்குறிக்கின்றார்.

ஸதாரயீ த்ரிவிஜா
மஹாவாஸா விஹோகர்விஹோவ்ருதே
ஸதாரயீ த்ரிவிஜா மஹாவாஸா
விஹோத்ராவிஹோவ்ருதே
ஐதத்ர்வைஸத் ப்ருதி த்ர்வைநிஷது

(இ—ள்) 'இதை அத்தியயனம் செய்தவிஜன் கர்ப்பவாசத்திலிருந்து விடுபட்டு மோட்சத்தைப்பெறுவான், இதை அத்தியயனம் செய்தவிஜன் கர்ப்பவாசத்திலின்று விடுபட்டு மோட்சத்தைபெறுவான். என்பதோம்சத்தியம்' என்பதுபனிஷத்து.

(வி—ரை) கர்ப்பவாசத்தினின்று விடுபட்டு என்பது உதிர்டதிவிர்த்தியைக்குறித்தது. மோட்சமென்பது இஷ்டப்ராப்தி-நம் ஸத்தியமென்பது உறுதிக்காக. இவ்வண்ணம அதர்வசிகைக்கிட்ட சிற்றுரை சொர்பமோ காருக.

இவ்வண்ணம்கௌசிகசூலப்பாலாழிக்குக்கௌஸ்துவமணியாய்த்தோன்றி, ஸ்ரீகோபாலதேசிகமூர்த்தி கருணாகடாட்சத்தால் சகலகலைகளுமோதியுணர்ந்து பிரசண்டலத்தாற் றமது விஜயப்பிரதாபம் விளங்குறநாட்டியமகாதேசிக ஸ்ரீவிஜயர்வம்சசதுலகராய் வையாகரணசார்வபௌமஸ்ரீ ராமஸ்வாமிதீட்சிதர் செல்வக்குமாரரும் ஸ்ரீசீதாம்பாகற்பகக்கிழுந்தபொற்பவரும, ஸ்ரீமத் பாரத்துவாஜகுலஜலதிக்குக்கவுத்துவமணியாய் அத்வைத வித்யாசாரியராய் நூற்றுநான்குகிரந்தங்களை நிர்மித்தருளிய ஸ்ரீமதப்பயதீட்சிதேந்திரர்வம்சத்திலவதரித்தசுதேசஸ்வரலல்லபாரமேசுவர வுபநிஷன்மார்க்கப்பிரவர்த்தகஸ்ரீ மஹாமஹோபாத்தியாய ஸ்ரீமதுதியாகராஜகுருபுங்கவர்சரணாம்புஜபராயணரும் பிரசுரப்ரதிஷ்டைகாந்த
சமாசம்பாதபத்மரேணுவேலைத்திலன்புமிக்கு
துள்ளவரும்,பிரம்மவித்யாபத்திரதிபருமான
பரமய.பத்சானனை.பாஞ்சஜன்னிய.பண்டித
ஸ்ரீனிவாஸமகிபுகவர் தென்மொழியிலியற்றிய
அதர்வசிகோவிருத்தி
முற்றிற்று.

அதர்வசிகோபநிடததாத்பரியசங்கிரகம்.

—— () ——

இவ்வுபநிடதம் வெளிப்படையாய் ப்ரணவாபின்ன சிவோபாஸ்தியை நிரூபித்தலாலும், இஃது பஞ்சருத்திரங்களிலொன்றாதலாலும், ருத்திராத்தியாயங்களுக்கு அடுத்த அதர்வசிரஸையும், அதன் பிறகு இவ்வுபநிடதத்தையும் நரசிம்மதாபினி முதலிய உபநிடதங்களெடுத்துக்குறிக்கும் முறையால் இது சிவபரமென்றேற்படுதலாலும், அநேக புராணங்களின் சிவாத்வைத வித்யாபரமாக விரித்துரை செய்யப்பட்டமையாலும் இதற்குக் குறிப்புக்களைக் கொண்டு தாத்பரியஞ்செய்யவேண்டுவதவசியமில்லை. இஃது, அதர்வசிரத்தின் பொருள்களை ஒருவாறு சுருக்கி ஸர்வஜன்னியாஸபூர்வகமாய் பரமசிவோபாஸ்திசெய்வதே மோக்ஷசாதனமென்றும் அப்பரமேசுவரனே ஸர்வகாரணப்பொருளாதலின் அவனது காரியகோடியில் அமைக்கப்பட்ட ப்ரம்ம விஷ்ணு ருத்திரன் இந்திரன் முதலியோர்க்கும் பலவேதாந்த மந்திரார்த்தவாதங்களிற்கூறப்படும்பரத்துவங்களெல்லாம் காரணத்தினின்று காரியத்தின்மேலேற்றப்பட்டதென்றும் 'யஸ்மிந் விஜ்ஞாதே ஸர்வமிதம் விஜ்ஞாதம் பவதி,' என்று 'எவனொருவனையறிந்தால் எல்லாமறியப்படு'மென காரண வாக்கியங்கள் குறித்தப்ரம்மலட்சணம் உமாஸஹாயனிடத்தேயமையுமென்றும் அதற்கு ப்ரணவவித்தையே ஸர்வவேத ஸாரமானமார்க்கமென்றும், அப்பிரணவத்தினது "நான்காவதர்த்த மாத்திரை" எனப்படும் ஸர்வப்ரபஞ்சகாரண நாதத்தின் தேவதை அம்மூர்த்தி என்றும், அதனைச் சிவாபின்னமாகவும், சிவனை ஆத்மஸ்வரூபமாகவும், தியானிப்பவர்க்கு அதிசீக்கிரம் ஸமஸ்தகர்மபலமான சித்தசுத்தியும் அதன் பிரயோஜனமான ஞானமும், அதன் முதிர்பான மோக்ஷமுமுண்டாமென நிரூபித்தலே இவ்வுபநிடதத்தின் பரமதாத்பரியம். இது அதர்வசிரோபநிடதத்தை அனுவதித்து அதிற்கண்ட வைதிக பாசுபத ப்ரம்மவித்தையையே கூறியதாகையால் அதற்குமிதற்கும் வித்யையொற்றுமை கூறியொழியவேண்டும். இது தனது பரிபூர்த்தியை ஏனையவுபநிடதங்களைப்போல் 'இத்யுபநிஷத்' 'இங்ஙனம் உபநிடதம் முடிந்தது' என்று பொதுவாய் வழங்கி முடிக்காது ஏனையவுபநிடதங்களிற்காணாதபடி 'ஸேயமாதர்வணீ சிகா' 'அதர்வசிகைமுடிந்தது'என்றுதானே கூறுதலால், அதர்வசிரத்திற் குறித்த வைதிக பாசுபத

ப்ரம்மவித்தையின்வழி ஆத்மப்ராணசிவோபாஸ்தியன்றி வேதாந்தங்களிற் குறிக்கப்படும் ஏனையவித்தைகள் அவ்வளவாகச் சிறந்தமோக்ஷமார்க்கங்களல்ல வென்றும், இதன்மேல் ஆன்மகோடிகள் நற்கதியடைவதற்குத் தெரிக்கவேண்டிய உண்மைப்பொருள் யாதொன்றுமில்லை யென்றுங் குறிப்பதாய் ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வணமென்ற வேதமகாபுருஷன் உச்சியிலமைந்தமையின், இதனை 'அதர்வசிகை' என்றார்கள். ஆகவே பரமோத்தமாதிகாரிக்கு இவ்வற்புதோபநிஷதமொன்றே மோக்ஷஸாதனமாவது ஆயினும் உலகத்திலதிகாரம் பலவகைப்பட்டிருக்கின்றமைபற்றி அவர்களும் கிருதார்த்தர்களாகவேண்டி மற்றையவுபநிஷதங்களுந் தோன்றினவென்க. இவ்வுபநிஷதம், துரீயசிவஸ்வரூபமே காரணப்ரம்மமென நிரூபித்துமுடித்தது. ஆதலால் இவ்வுபநிஷதத்தின் தாத்பரியம் ப்ராணசிவாத்மைக்யவித்தையே ஆகப் பஞ்சருத்திரங்களினின்றும் முடிவுரையாய் நிற்பதொன்றென்க.

அதர்வசிகோபநிஷத்தாத்பரிய சங்கிரகம்

முற்றிற்று

அதர்வசிகோபநிடத அரும்பதவிளக்கம்

அங்குஷ்டமாத்ரா: = தகராகாசத்தில் ஸ்தானமுள்ளவர்கள்

ஆத்மஜ்யோதி: = ஆன்மசொரூபமான ஜோதி

ஆதர்வண: = அதர்வமகரிஷியின் புத்திரர்

ஆதித்யா: = ஆதித்யரென்றகணதேவதைகள்

ஆவர்த்ததே = நிலைபெறுகின்றது

ஈச: = சிவன், பிரபு

ருச: = யாப்புள்ளமந்திரங்கள்

ஏகர்ஷி: = அதர்வவேதிகளின் அக்னி

ஓங்கார: = சிவன், பிரணவம்

ஓங்காரமூர்த்தி: = பிரணவத்தின்சொரூபம்

கரணானி = புலன்கள்

க்ரதுசதம் = அனேகயாகங்கள்

காரணம் = மூலகாரணம்

காயத்ரீ = ஒருமந்திரம், ஒருயாப்பு

சதுஷ்பாத் = நான்குஅம்சங்களுடையது

சத்வாரி = ஷை

சதுஸ்ஸப்ததி: = எழுபத்துநான்கு

ஜகதீ = ஓர்யாப்பு

ஜாக்ரிதம் = ஜாக்ரம்

துரீயம் = துரீயாவஸ்தை

த்ரிஷ்டுப் = ஓர்யாப்பு

திசோதிசம் = திக்குகடோறும்

தீர்க்க: = உள்ளத்திலோர்மாத்திரையதிகம்

தாதா = படைப்பவன்

த்யாத்ருத்யாநம் = தியானிக்கத்தக்கவனைதரிக்கச்செய்வது

த்யாதா = சங்கற்பிப்பவன்

த்யானம் = சிந்தித்தல், அதற்குரியகருவி

நாதாந்தே = நாதமொடுங்குமிடம்
ப்லுதமாத்ரா: = ஒருமாத்திரையிலொடுங்கினவை
ப்ரயாதி = நடக்கும்
ப்ரலீயதே = ஒடுங்குகின்றது.
பாத: = பகுதி
ப்ராண: = பிராணவாயு, பிராணகோசம்
பீதா = பொன்னிறமுடையது
ப்லுத: = உள்ளமாத்திரைக்கிரண்டதிகமுள்ளது
பாஸ்வதீ = ஓர்சக்தி
மந: = மனது மனோமயகோசம்
மருத: = மருத்துக்களென்றகணதேவதை
மாத்ரா = பகுதி
முக்த: = மோக்ஷத்தைப்பெற்றவன்
யஜு: = யாப்பிலாச்சொற்றடர்
ரக்தா = செந்நிறமுடையது
ருத்ரா: = ஓர்கணதேவதைகள்
வஸவ: = ஷை
வித்யுத்வதீ = மின்னல்நிறமுள்ளவோர்சக்தி
விராட் = ஓர்யாப்பு
ஶம்பு: = சிவன்
ஶாந்த: = ஒடுங்கினவன், உலகமற்றவிடம்
ஶிவங்கர: = மோக்ஷத்தையளித்தவன்
ஸம்யுக்தா = அறியவேண்டியது
ஸம்வர்த்தக: = சர்வசம்ஹாரஞ்செய்யுங்காலாக்னி
ஸம்விஶந்தி = ஒடுங்குகின்றார்கள்,
ஸர்வதேவவேதயோநி: = எல்லாதேவர்களுக்கும்வேதங்களுக்கும் காரணம்
ஸர்வேஶ்வர: = எல்லாவற்றிற்குமீசன், சங்கரன்
ஸாமானி = இசையுடையமந்திரங்கள்
ஹ்ரஸ்வ: = எழுத்துக்குரியமாத்திரை.

[illegible]

[illegible]

——()——

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ஸம்யந்தாரம் = ஸம்ஹர்தாரமித்யர்த்தே |

காரணாநாம் = காரணாநாம் ஸர்வேஷாம் |

ப்ரதீயாத் = ப்ரத்யக்ஷேண மந ஆதிஷு ஸம்பவதி யா ஸ்யாத் |

ப்ரதிதாதா = தாதா ப்ரதி ப்ரதிதாத்ருத்வாத் ப்ரா [illegible] ஸ்தாவர ஜங்கம ஸ்வரூப ஸாதகம் |

த்யானம் = ஸர்வகாரணம் ஸதா ஸ்தம்ப்ய ஸ்வாத்மவிஷயம் த்யாதவ்யம் ||

நாநாங்க: = நாநாவித்யாப்ரஜாயஸ்வ நாநாரூபதயா ஸ்திதவ்யம் |

ஓங்காரமதி: = ஓம் இதி ஸம்ஜ்ஞா நம் |

அதர்வசிகோபநிஷத்:

ஶ்ரீக்ருஷ்ணார்பணமஸ்து |

ஸம்பூர்ணமஸ்து ||
